வணக்கம்

ஆகாஷ்வாணி – புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : கனிமொழி கலியபெருமாள்

தேதி : 03.10.2026 நேரம் : மாலை 6.10 மணி

---

## தலைப்புச் செய்திகள்

வளர்ச்சியின் பலன்கள், நாட்டின் அனைத்து தரப்பு மக்களுக்கும் கிடைக்க வேண்டியதன் அவசியத்தை, குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

ஆசிய விளையாட்டுப் போட்டியில், பாகிஸ்தானுக்கு எதிரான 20 ஓவர் கிரிக்கெட் போட்டியில் இந்தியா தங்கப் பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளது

'இந்திய விமானப்படை - பிழையற்றது, அசைக்க முடியாதது மற்றும் துல்லியமானது என்ற கருப்பொருள் அடிப்படையில் விமானப் படை தினம் வருகிற 8ஆம் தேதி கொண்டாடப்பட உள்ளது.

தட்டாஞ்சாவடி சட்டப் பேரவை தொகுதி இடைத் தேர்தல், வரும் 6ஆம் தேதி நடைபெற உள்ள நிலையில், தேர்தல் பிரச்சாரம் நாளை மாலையுடன் முடிவடைய உள்ளது.

---

## கௌடல்யா மாநாடு (11)

வளர்ச்சியின் பலன்கள், நாட்டின் அனைத்து தரப்பு மக்களுக்கும் கிடைக்க வேண்டியதன் அவசியத்தை, குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார். புதுடெல்லியில் நடைபெற்ற 5ஆவது கௌட்டில்யா பொருளாதார மாநாட்டில் இன்று உரையாற்றிய அவர். நிலையான வளர்ச்சி என்ற அடிதளத்துடன் அனைத்தையும் உள்ளடக்கிய மேம்பாட்டுடன் முன்னேற்றப் பாதையில் செல்ல முடியும் என்று சுட்டிக்காட்டினார். வளர்ச்சி அடைந்த பாரதத்தை கட்டமைக்க, ஒருங்கிணைந்த முயற்சிகளின் அவசியத்தையும் அவர் எடுத்துரைத்தார். இம்மாநாட்டில் உரையாற்றிய ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு. சஞ்சய் மல்ஹோத்ரா, கோவிட்-19 பெருந்தொற்று காலம் உட்பட, உலகம்

தொடர்ச்சியான அதிர்ச்சிகளில் இருந்து சமாளித்து மீண்டுள்ளது என்று குறிப்பிட்டார்.

--------------------------

## அமித் ஷா (17)

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு, கிராமப்புற பொருளாதாரத்திற்கு புதிய உத்வேகம் அளிக்கும் வகையில், பசுவின் சாணத்தில் இருந்து உயிரி வாயு, மற்றும், இயற்கை உரம் உற்பத்தி செய்வது முதல், பால் பொருட்களை பதப்படுத்துவதில் தொடங்கி, விற்பனை செய்வது வரை, கால்நடை வளர்ப்பைச் சுற்றி, ஒரு முழுமையான சூழல் அமைப்பை உருவாக்கி வருவதாக, மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார். அவர் இன்று, மத்திய பிரதேச மாநிலம் போபாலில் நடைபெற்ற, மாநில அளவிலான **கௌ பாலக் சம்மேளன்** நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றுகையில், கூட்டுறவு அமைச்சகம் அமைக்கப்பட்டதன் மூலம், கால்நடை வளர்ப்பாளர்கள் அதிக பயனடைந்து வருவதாக, கூறினார். மேலும், குற்றவியல் நீதி சீர்திருத்தங்கள் குறித்து பேசிய அமைச்சர், பாரதீய நியாய சம்ஹிதா முழுமையாக செயல்படுத்தப்பட்டவுடன் இந்தியாவின் குற்றவியல் நீதி அமைப்பு என்பது, உலகின் மிக நவீனமானதாக மாறும் என்று தெரிவித்தார். பாரதீய நியாய சம்ஹிதா முழுமையாக அமல்படுத்தப்பட்டவுடன், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதில் இருந்து, 3 ஆண்டுகளுக்குள் வழக்குகளை முடித்து வைக்க முடியும் என்றும் அவர் கூறினார்.

--------------------------

## மக்கள் சேவை மூலமான தேச சேவை - 1 (12)

**மக்கள் சேவை மூலமான தேச சேவை** என்ற தாரக மந்திரத்தின் அடிப்படையில், பொது சேவையில் 25 ஆண்டுகளை பூர்த்தி செய்யும் பிரதமர் திரு நரேந்திர மோடியின் **சேவைப் பயணம்**, இன்று வரை அயராத உறுதிப்பாட்டுடன் தொடர்கிறது. **சேவை மற்றும் நல்லாட்சி** என்னும் பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வைக்கு ஏற்ப, 2047-ஆம் ஆண்டிற்குள் முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்தும் இலக்கை நோக்கி, நாடு தொடர்ச்சியாக பயணித்து வருகிறது. **அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி-அனைவருக்கும் சமூக அதிகாரம்**

என்னும் அரசின் கொள்கையினால், நாட்டு மக்களின் வாழ்க்கையில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலை நோக்கு பார்வை அடிப்படையிலான, சரக்கு மற்றும் சேவை வரி குறித்து இன்று, சேவா சங்கல்ப் அபியான் என்னும், இந்த சிறப்பு தொடரில் காண்போம்...

(வாய்ஸ்)

## மக்கள் சேவை மூலமான தேச சேவை 1 (19)

(வாய்ஸ்)

2017அறிமுகப்படுத்தப்பட்ட சரக்கு மற்றும் சேவை வரி, இந்தியாவின் மிக நீண்டகால பொருளாதார தடைகளை முறியடிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டது. 17 வரிகள் மற்றும் 13 செஸ் வரிகள், ஒரு பொதுவான கட்டமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டு, ஒரே நாடு-ஒரே வரி-ஒரே சந்தை என்ற நடைமுறை, ஜிஎஸ்டி அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம் சாத்தியமானது. பல மத்திய மற்றும் மாநில வரிகள், தொடர் வரிவிதிப்பு, மற்றும், எல்லைச்சாவடிகளால், மாநிலங்களுக்கு இடையே போக்குவரத்து மற்றும் வரி சோதனைகள், ஆவணப் பணிகள் என, சரக்கு லாரி ஓட்டுனர்கள் பெருமளவு நேரத்தை செலவிட வேண்டி இருந்தது. இந்த தாமதங்களால், தளவாட செலவுகள், சர்வதேச அளவுகோலை விட, 2 முதல், 3 மடங்கு அதிகமாக இருந்ததாக, உலக வங்கி குறிப்பிட்டது. ஜிஎஸ்டிக்கு முன்பு, ஒரு நாளுக்கு சுமார் 225 கிலோ மீட்டர் பயணித்த நீண்ட தூரம் செல்லும் லாரிகள், ஜிஎஸ்டி அமல்படுத்தப்பட்ட பின்பு 300 முதல், 325 கிலோ மீட்டர் வரை, பயணிக்கின்றன. இதன்மூலம், 44 சதவிகித வளர்ச்சியும் எட்டப்பட்டுள்ளது. ஜிஎஸ்டி, பொருளாதாரத்தை முறைப்படுத்தவும் உதவுகிறது. 2017ஆம் ஆண்டு 66.5 லட்சமாக இருந்த வரி செலுத்துவோரின் எண்ணிக்கை, 2026 மே மாத நிலவரப்படி, 1.65 கோடியாக உயர்ந்துள்ளது. அதே நேரத்தில், 2025-26ஆம் நிதியாண்டில், ஜிஎஸ்டி வரி வசூல், 22.27 லட்சம் கோடி ரூபாயை எட்டியுள்ளது.

## மக்கள் சேவை மூலமான தேச சேவை 2 (8)

மாநிலங்களுக்கு பகிர்ந்து அளிக்கக் கூடிய நிதி, 32 சதவிகித்தில் இருந்து, 41 சதவிகிதமாக உயர்த்தப்பட்டது. குறிப்பாக, கர்நாடகா, கேரளா, தமிழ்நாடு, தெலங்கானா, மற்றும் ஆந்திர பிரதேசம் போன்ற மாநிலங்கள்,

சரக்கு மற்றும் சேவை வரிக்கு முந்தைய காலத்துடன் ஒப்பிடும் போது, தற்போது, கணிசமான வரிப் பகிர்வுகளை பெறுகின்றன. ஒரே நாடு-ஒரே வரி கொள்கை, தனித்தனி வரி பிரேதேசங்களாக இருந்த இந்திய மாநிலங்களை, ஒரே தேசிய பொருளாதார சந்தையின் கீழ் கொண்டு வந்துள்ளது என்றால் அது மிகையில்லை.

---------------------------

## ஆசியக் கோப்பை-கிரிக்கெட் (12)

ஆசிய விளையாட்டுப் போட்டியில், பாகிஸ்தானுக்கு எதிரான 20 ஓவர் கிரிக்கெட் போட்டியில் இந்தியா தங்கப் பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளது. ஜப்பானில் நடைபெற்ற இப்போட்டியில், முதலில் பெட் செய்த இந்திய அணி, 6 விக்கெட் இழப்பிற்கு, 211 ரன் எடுத்திருந்த நிலையில், 212 ரன் என்ற வெற்றி இலக்குடன் தொடர்ந்து ஆடிய பாகிஸ்தான் அணி, 6 விக்கெட்டுகளை இழந்து 192 ரன்னுக்கு ஆட்டம் இழந்தது.

இந்திய மல்யுத்த வீரர் அமன் செஹ்ராவத் ஆடவர் 57 கிலோ எடைப் பிரிவில், தங்கப் பதக்கம் வென்றுள்ளார். இவர், வடகொரிய உலக சேம்பியன் சோங் சாங் ஹான்-ஐ, 11க்கு 7 என்ற புள்ளிக் கணக்கில் வீழ்த்தி, இந்தியாவிற்கு மற்றொரு தங்கப் பதக்கத்தை பெற்றுத் தந்துள்ளார்.

தற்போது 20 தங்கம், 26 வெள்ளி, 36 வெண்கலம் என, மொத்தம் 82 பதக்கங்களுடன், பதக்கப் பட்டியிலில் இந்தியா 5ஆவது இடத்தில் உள்ளது.

---------------------------

## பியூஷ் கோயல் (10)

ஜி-20 உறுப்பு நாடுகள் உடனான இந்தியாவின் வர்த்தகம், வெளிப்படையான, மற்றும், பாகுபாடுடற்ற விதிகளை அடிப்படையாக கொண்டது என்று, மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறினார். அமெரிக்காவின் மில்வாக்கி நகரில் நடைபெற்ற ஜி-20 வர்த்தக அமைச்சர்கள் பங்கு பெற்ற 2 நாள் மாநாட்டின் நிறைவு நாளில் உரையாற்றி திரு. கோயல், 140 கோடி மக்களுக்கு சேவை செய்யும் உள்நாட்டு தேவையை சார்ந்த பொருளாதாரத்துடன், இந்தியா, உலகின் மிக வேகமாக வளர்ந்து வரும் பெரிய பொருளாதாரமாக திகழ்கிறது என்று, குறிப்பிட்டார். மேலும், இந்தியாவின் உற்பத்தித் திறன், அதன் உள்நாட்டு

மற்றும் உலகளாவிய தேவைகளை பூர்த்தி செய்கிறது என்றும், அவர் கூறினார்.

--------------------------

## பியூஷ் கோயல்-பட்டயக்கணக்காளர் (12)

இந்திய-அமெரிக்க பொருளாதார ஒத்துழைப்பை வலுப்படுத்துவதில், பட்டயக் கணக்காளர்கள் முக்கிய பங்கு வகிப்பதாக, மத்திய வர்த்தக தொழில் துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார். அமெரிக்காவில் உள்ள இந்திய பட்டயக் கணக்காளர்களுடன் கலந்துரையாடிய அவர், எல்லைத் தாண்டிய வரி முறைகள், ஒழுங்குமுறை நடவடிக்கைகள், நிதி ஆளுமையில் அவர்களின் செயல்பாட்டை எடுத்துரைத்தார். வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கும் வகையில், இந்திய தொழில் நிறுவனங்கள் தயார் நிலையில் இருப்பதற்கு, பட்டயக் கணக்காளர்களின் பங்களிப்பையும் அவர் சுட்டிக் காட்டினார். வலுவான உள்நாட்டு வளர்ச்சியுடன் கூடிய, நாட்டின் பொருளாதார உத்வேகம், பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தன்னம்பிக்கை, சுயசார்புக் கொள்கைகளை பிரதிபலிப்பதாகவும் திரு. பியூஷ் கோயல் தெரிவித்தார்.

--------------------------

## விமானப்படை தினம் 1 (4)

94வது இந்திய விமானப்படை தினம் வரும் 8ஆம் தேதி கொண்டாடப்படவுள்ளது. இந்த ஆண்டு கொண்டாட்டத்தின் கருப்பொருள் 'இந்திய விமானப்படை - பிழையற்றது, அசைக்க முடியாதது மற்றும் துல்லியமானது' என்பதாகும். இதுகுறித்த கூடுதல் தகவல்கள்......

(வாய்ஸ்)

## விமானப்படை தினம் 2 (20)

(வாய்ஸ்)

<u>இந்திய விமானப் படை தினத்தை கொண்டாடும் விதமாக, ஹிண்டன் விமானப்படைத் தளத்தில், அணிவகுப்பு, டீம் சக்தி ஏர் வாரியர் டிரில் டீமின் நிகழ்ச்சிகள், அதனைத் தொடர்ந்து இந்திய விமானப்படையினரின் இசை நிகழ்ச்சி மற்றும் ஹெரிடேஜ் ஃப்ளைட்டின் வானூர்தி சாகச நிகழ்ச்சி உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன. ராணுவத் தலைமைத் தளபதி, ஜெனரல் தீரஜ் சேத், கடற்படைத் தலைமைத் தளபதி அட்மிரல் கிருஷ்ண சுவாமிநாதன் மற்றும் முன்னாள்</u>

விமானப்படைத் தளபதிகளும் இந்த அணிவகுப்பில் கலந்துகொள்வார்கள். அணிவகுப்பிற்கு முன்னதாக Mi-17-1V ரக ஹெலிகாப்டரின் துவாஜ் வானில் பறக்கும் அணிவகுப்பும், மூன்று Mi-17 ரக ஹெலிகாப்டர்கள் தேசியக் கொடியையும் இந்திய விமானப்படைக் கொடியையும் ஏந்திச் செல்லும் என்று, ஸ்குவார்ட்ரன் லீடர் பல்லவி சங்வான் இன்று புதுடெல்லியில், இந்த விவரங்களை பகிர்ந்து கொண்டார். தொடர்ந்து சிறப்பான செயல்பட்ட படைப்பிரிவுகளுக்குப் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்படும் என்றும், அவர் மேலும் தெரிவித்தார். இந்திய விமானப்படையின் முதன்மையான, முற்றிலும் பெண்களைக் கொண்ட விமானப் போர்வீரர் அணிவகுப்புக் குழுவான 'டீம் சக்தி'யும் இந்த நிகழ்வில் பங்கேற்கும். அதன் துல்லியம், சுறுசுறுப்பு மற்றும் ஒழுக்கத்திற்காகப் புகழ்பெற்ற இக்குழு, மிகவும் ஒருங்கிணைந்த அசைவுகளையும் சிக்கலான அணிவகுப்புகளையும் வெளிப்படுத்துகிறது.

## விமானப்படை தினம் 3 (4)

தனது செயல்பாடுகளின் மூலம், சக்தி குழு பல்வேறு நிகழ்வுகளில் இந்திய விமானப்படையின் பெருமை, வலிமை மற்றும் கம்பீரத்தைப் பிரதிபலித்து, பெண்கள் அதிகாரமளித்தல் மற்றும் தொழில்முறைக்கான ஒரு சக்திவாய்ந்த தூதராக விளங்குகிறது.

--------------------------

## புதுச்சேரி இடைத் தேர்தல் (10)

புதுச்சேரி தட்டாஞ்சாவடி சட்டப் பேரவை தொகுதி இடைத் தேர்தல், வரும் 6ஆம் தேதி நடைபெற உள்ள நிலையில், பல்வேறு கட்சித் தலைவர், வேட்பாளர்கள். மற்றும் தொண்டர்கள், தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். தேர்தல் பிரச்சாரம் நாளை மாலையுடன் முடிவடைய உள்ளது.

தட்டாஞ்சாவடி சட்டப் பேரவை இடைத் தேர்தலை முன்னிட்டு வரும் நாளை மறுநாள் 5ஆம் தேதியும், மற்றும் வாக்குப்பதிவு நாளான 6ஆம் தேதியும் தொகுதியில் உள்ள அனைத்து பள்ளிகளுக்கும் விடுமுறை அறிவிக்கப் பட்டுள்ளது. தேர்தல் பணிகளுக்கான ஏற்பாடுகள் நடைபெறுவதை முன்னிட்டு பள்ளிகளுக்கு விடுமுறை அறிவிக்கப் பட்டுள்ளதாக, பள்ளிக் கல்வித் துறை அறிவித்துள்ளது.

--------------------------

## தான்சானியா-ஹரிவன்ஸ் (15)

சர்வதேச நாடாளுமன்ற ஒன்றியத்தின் 153வது மாநாடு, இந்த மாதம் 5 முதல் 9 ஆம் தேதி வரை தான்சானியாவில் நடைபெற உள்ளது. இம்மாநாட்டில் பங்கேற்க, மாநிலங்களவை துணைத் தலைவர் ஹரிவன்ஷ் தலைமையிலான இந்திய நாடாளுமன்றத் தூதுக்குழு, தான்சானிய செல்கிறது. சமகால உலகளாவிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள் குறித்த பல்வேறு கூட்டங்கள், குழு விவாதங்கள் மற்றும் பயிலரங்குகளில் இக்குழு பங்கேற்று, இதுகுறித்த இந்தியாவின் கண்ணோட்டங்களை எடுத்துரைக்கும். இந்தியத் தூதுக்குழுவின் உறுப்பினர்கள், ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகள், அமைதி மற்றும் சர்வதேசப் பாதுகாப்பு, நீடித்த வளர்ச்சி, பெண்களின் பங்கேற்பு, அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் ஆகியவை தொடர்பான கலந்துரையாடல்களில் பங்கேற்பார்கள். இக்குழு, பயங்கரவாத எதிர்ப்பு, அத்தியாவசிய கனிமங்கள், செயற்கை நுண்ணறிவு மற்றும் கடல்சார் பாதுகாப்பு, பருவநிலை மாற்றம் மற்றும் மலை மற்றும் கடல் சுற்றுச்சூழல் அமைப்புகளின் பாதுகாப்பு உள்ளிட்டவை குறித்தும் விரிவாக எடுத்துரைக்கும்.

---------------------------

## மீண்டும் தலைப்புச் செய்திகள்

வளர்ச்சியின் பலன்கள், நாட்டின் அனைத்து தரப்பு மக்களுக்கும் கிடைக்க வேண்டியதன் அவசியத்தை, குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

ஆசிய விளையாட்டுப் போட்டியில், பாகிஸ்தானுக்கு எதிரான 20 ஓவர் கிரிக்கெட் போட்டியில் இந்தியா தங்கப் பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளது

'இந்திய விமானப்படை - பிழையற்றது, அசைக்க முடியாதது மற்றும் துல்லியமானது என்ற கருப்பொருள் அடிப்படையில் விமானப் படை தினம் வருகிற 8ஆம் தேதி கொண்டாடப்பட உள்ளது.

தட்டாஞ்சாவடி சட்டப் பேரவை தொகுதி இடைத் தேர்தல், வரும் 6ஆம் தேதி நடைபெற உள்ள நிலையில், தேர்தல் பிரச்சாரம் நாளை மாலையுடன் முடிவடைய உள்ளது.